


# 20.05.2026 செய்திகள்

## ஆபத்தான தெரு நாய்கள் கருணைக் கொலை: உச்சநீதிமன்றம் அனுமதி

- வெறி நாய்கள், குணப்படுத்தமுடியாத அளவுக்கு நோய்பாதிப்புக்கு உள்ளான நாய்கள், ஆபத்தான தெரு நாய்களை கருணைக் கொலை செய்ய முதன் முறையாக அனுமதி அளித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

» தாமாக முன்வந்து விசாரணை:

- தொடர் தெரு நாய்கள் கடியால் குழந்தைகள், முதியவர்கள் பாதிக்கப்படுவது, உயிரிழப்புகள் ஏற்படுவதுதொடர்பான வெளியான பத்திரிகை செய்திகளின் அடிப்படையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்த விவகாரத்தை தாமாக முன் வந்து விசாரித்த உச்சநீதிமன்றம், தெரு நாய்கள் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் கால்நடைகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி மாநில அரசுகளுக்கு பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தது.

» முக்கிய உத்தரவு:

- தெருக்கள், பள்ளி, மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித் திரியும் தெரு நாய்கள் அனைத்தும் பிடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
- அவ்வாறு பிடிக்கப்படும் தெருநாய்களுக்கு தடுப்பூசி அல்லது கருத்தடை செய்த பிறகு அவற்றை மீண்டும் பொது இடங்களில் விடக்கூடாது. அவற்றுக்கென பிரத்யேக காப்பகங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
- அதுபோல, நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் பிற கால்நடைகளையும் பிடித்து காப்பகங்களில் அடைத்து பராமரிக்க வேண்டும்.
- இவை மீண்டும் பொது இடங்களில் சுற்றித் திரியாமல் இருப்பதை அரசு அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதனடிப்படையில், பொது இடங்களில் சுற்றித் திரியும் கால்நடைகளுக்கான வழிகாட்டு தடைமுறையை (எஸ்ஓபி) இந்திய கால்நடை நல வாரியம் வெளியிட்டது.
- இந்த உத்தரவைத் திரும்பப் பெற வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத்.சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

» உத்தரவை திரும்பப் பெற மறுப்பு:

- அப்போது, அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது:
- கருத்தடை தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட தெரு நாய்கள் உள்ளிட்ட விலங்குகளுக்கான பிறப்பு கட்டுப்பாட்டு செயல்திட்டம், போதிய நிதி ஒதுக்கீடு இன்றி சீரற்ற நிலையில் உள்ளது.
- இந்த நீண்டகால செயலற்றத் தன்மையால், தெரு நாய்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சுற்றித் திரியும் கால்நடைகளால் ஏற்படும் பிரச்னை தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளன.

» கருணை கொலைக்கு அனுமதி:

- தெரு நாய்களின் எண்ணிக்கை அபாயகரமான அளவை எட்டியுள்ள பகுதிகளிலும், அடிக்கடி ஏற்படும் நாய்கடி சம்பவங்கள் அல்லது ஆக்ரோஷமான தாக்குதல்கள் பொது பாதுகாப்புக்கு தொடர் அச்சுறுத்தலாக விளங்கும் இடங்களில்

SURESH'

வெறிநாய்கள், குணப்படுத்த முடியாத அளவுக்கு நோய் பாதிப்புக்கு உள்ளான நாய்கள் அல்லது ஆபத்தான தெரு நாய்களை கருணைக் கொலை நடவடிக்கையை உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளலாம்.

- அத்தகைய கருணைக் கொலையை, சட்டரீதியிலான வழிமுறைகளைப் பின்பற்றியும் கால்நடை மருத்துவ நிபுணர்களின் மதிப்பீட்டுக்கும் பின்னரே மேற்கொள்ளவேண்டும்.
- அத்துடன், விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுத்தல் சட்டம் 1960, விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு விதிகள் 2023 மற்றும் அதுதொடர்பான பிரசட்ட விதிமுறைகளுக்கு இணங்கியே இந்த கருணைக் கொலையை செயல்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்தனர்.

## இந்தியாவும் இத்தாலியும்: இந்தோ-மத்தியதரைக் கடலுக்கான ஓர் உத்திசார் கூட்டாண்மை

- புதிய இலக்குகளை அடைவதற்கும், இருநாடுகளின் பரஸ்பர ஆற்றல்களை ஒன்றிணைப்பதற்கும், இருதரப்பு உறவை ஆழப்படுத்தவும் பல்வகைப்படுத்தவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.
- ஒரு தொழில்துறை வல்லரசாக இத்தாலியின் நிலையைப் பிரதிபலிக்கும் வகையில், இத்தாலிய வடிவமைப்பு, உற்பத்தித் திறன் மற்றும் உலகத்தரம் வாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களுக்கும், நூறுக்கும் மேற்பட்ட அதிக முதலீடு கொண்ட யூனிகார்ன் நிறுவனங்கள் மற்றும் 2,00,000 புத்தொழில் நிறுவனங்களைக் கொண்ட இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி, பொறியியல் திறமை.
- அதன் பரந்த செயல்பாடு, புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு சூழலியலுக்கும் இடையே ஒரு சக்திவாய்ந்த ஒருங்கிணைப்பை உருவாக்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.
- ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இந்தியாவிற்கும் இடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், இரு திசைகளிலும் வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க வழிவகுக்கிறது.
- பாதுகாப்பு மற்றும் விண்வெளி, தூய்மையான தொழில் நுட்பங்கள், இயந்திரங்கள், வாகன உதிரிபாகங்கள், ரசாயனங்கள், மருந்துகள், ஜவுளி, வேளாண்- உணவு, சுற்றுலா முதலிய துறைகளில் கவனம் செலுத்தி, 2029-ம் ஆண்டிற்குள் இத்தாலிக்கும், இந்தியாவிற்கும் இடையேயான 20 பில்லியன் யூரோ (ரூ.2.24 லட்சம் கோடி) அளவுக்கு வர்த்தக இலக்கை அடையவும், அதை விஞ்சவும் நாங்கள் விரும்புகிறோம்.
- இந்தச் சூழலில், இந்திய-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் (ஐஎம்இசி), நவீனப் போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பு, எண்ம (டிஜிட்டல்) வலையமைப்புகள், எரி சக்தி அமைப்புமுறைகள் மற்றும் மீள்திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றின் மூலம் எங்கள் பிராந்தியங்களை இணைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு தொலைநோக்குப் பார்வையாகும்.
- இந்தத் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்காக, இந்தியாவும் இத்தாலியும் மற்ற கூட்டாளிகளுடன் இணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளன.
- இந்தியா - இத்தாலி இடையேயான ஆழமான கூட்டாண்மை மற்றும் நீடித்த கலாசாரப் பிணைப்புகளைப் பயன்டுத்தி, எங்கள் பொதுவான சவால்களை எங்களால் எதிர்கொள்ள முடியும்.
- இந்திய கலாசாரத்தில், 'தர்மம் எனும் கருத்துரு, எங்கள் செயல்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்புணர்வை ஏற்படுத்துகிறது. அதே சமயம், ஒன்றோடொன்று இணைச்சப்பட்ட இந்த எண்ம (டிஜிட்டல்) யுகத்தில், வசுதைவ குடும்பகம்' (உலகம் ஒரு குடும்பம்) என்ற கொள்கை வலிமையாக எதிரொலிக்கிறது.
- இத்தகைய மாண்புகள், மறுமலர்ச்சிக் காலத்தில் வேரூன்றிய இத்தாலியின் மனிதநேயப் பாரம்பரியத்தில் இயல்பாகவே பிரதிபலிக்கின்றன. அது ஒவ்வொரு தனிநபரின் மாண்பையும், மக்களையும், சமூகங்களையும் ஒன்றிணைக்கும் கலாசாரத்தின் ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறது.
- எனவே, எங்கள் பகிரப்பட்ட தொலை நோக்குப் பார்வை, மக்களை மையமாகக் கொண்டு, ஒரு வலிமையான மற்றும் முற்போக்கான இந்திய-இத்தாலி கூட்டாண்மைக்கு அடித்தளம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI |
|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 |